மாண்பமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி.

**முன்னிலை: திரு.எம்.பொன்பாண்டி, பி.ஏ.,பி.எல்.,**

**நீதித்துறை நடுவர், பழனி**

2026 ம் வருடம் மார்ச் மாதம் 12 ம் நாள் வியாழக்கிழமை

**சி.ஆர்.எல்.எம்.பி.எண். 213/2026**

in

**CC.No. 255/2022**

முருகன் வயது 52/26,
த/பெ.பழனிச்சாமி,
8 வது வார்டு,
கோம்பபட்டி,
கணக்கன்பட்டி,
பழனி.

... மனுதாரர் / 2 வது எதிரி

/எதிராக /

சார்பு ஆய்வாளர்,
பழனி அடிவாரம் காவல் நிலையம்,
குற்ற எண். 14/2021
சட்டப்பிரிவுகள் 3(1),4(2)(c),5(1)(a),5(1)(d),7(1)(b) ITP Act.

... எதிர்மனுதாரர் / புகார்தாரர்

2 வது எதிரி காவல்படுத்தப்பட்ட நாள் 07.03.2026.

இப்பிணை மனு இன்று என் முன்னர் விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் / 2 வது எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.கே.பூபதி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 திரு.ப.பார்த்திபன் அவர்கள் ஆஜராகி வாதிட்டதை கேட்டறிந்தும், வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை என்னுடைய பரிசீலனையிலிருந்தும் வந்த இந்த மனுக்களில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

1. மனுதாரர் / 2 வது எதிரி தரப்பு வழக்குரைஞர் சார்பில் பிரிவு 480 BNSS ன் படி இப்பிணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் / 2 வது எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் சட்டப்பிரிவுகள் 3(1),4(2)(c),5(1)(a),5(1)(d),7(1)(b) ITP Act ன் படியான குற்றமாகும்.

3. <u>மனுதாரர் /2 வது எதிரி தரப்பு வாதம் :</u>

**மனுதாரர் / 2 வது எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்குரைஞர்** அவர் தரப்பு வாதத்தில், எதிரி கடந்த 25.02.25 ம் தேதி வழக்கு விசாரணைக்கு ஆஜராகாததால் பிணையில் வர இயலாத பிடியாணை பிறப்பிக்கப்பட்டு நிலுவையில் இருந்த நிலையில் கடந்த 07-03-2026 ம் தேதி பிடியாணை நிறைவேறப்பப்பட்டு கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளார் என்றும், 2 வது எதிரியின் மீது பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் / 2 வது எதிரி நிரந்தர முகவரி கொண்டவர் என்றும், சட்டத்தினை மதிக்கக்கூடிய நபர் என்றும், எங்கும் தலைமறைவாகமாட்டார் என்றும், நீதிமன்றம் பிறப்பிக்கும் நிபந்தனைகளை பின்பற்றி நடக்க மனுதாரர் தயாராக இருப்பதாகவும், எனவே மனுதாரரை பிணையில் விடுவிக்கவேண்டியது அவசியம் என வாதிடப்பட்டுள்ளது.

4. <u>அரசு தரப்பு வாதம்</u> :

அரசு தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள பதிலில் நீண்ட காலமாக பிடிகட்டளை நிலுவையில் தலைமறைவாக இருந்த 2 வது எதிரி கடந்த 07.03.26 ம் தேதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனவும், இவ்வழக்கில் சாட்சிகளை விசாரிக்கவேண்டி வழக்கு புலன் விசாரணைக்கு உதவியாகவும், 2 வது எதிரியை பிணையில் விட்டால் வெளிமாவட்டம் சென்றுதலைமறைவாக கூடும் என்றும்,மேற்படி குற்ற செயலில் மீண்டும் ஈடுபடக்கூடும் என்றும், சாட்சிகளை கலைக்க நேரிடும் என்பதாலும் 2 வது எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**5) இருதரப்பும் கேட்கப்பட்டது.** வழக்கு ஆவணங்கள் யாவும் இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலினை செய்தது. 2 வது எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களானது பிரிவுகள் 3(1),4(2)(c),5(1)(a),5(1)(d),7(1)(b) ITP Act ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கானது சி.சி.255/2022 என விசாரணைக்கு எடுக்கப்பட்டு சாட்சி விசாரணைக்கு வழக்கு இருந்த நிலையில் எதிரி கடந்த 25.02.2025 ம் தேதி வழக்கு விசாரணைக்கு ஆஜராகாததால் இந்நீதிமன்றத்தால் 2 வது எதிரிக்கு எதிராக பிணையில் வர இயலாத பிடிகட்டளை பிறப்பிக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில், கடந்த 07.03.2026 ம் தேதி பிடிகட்டளை நிறைவேற்றப்பட்டு நீதிமன்ற

காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். 2 வது எதிரி 07.03.2026 ம் தேதி முதல் நீதிமன்ற காவலில் இருந்துவருவதாலும், கற்றறிந்த மனுதாரர் வழக்கறிஞரின் வாதத்தினை கருத்தில் கொண்டும், கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனுதாரர் / எதிரிக்கு பிணை வழங்கி உத்தவிடப்படுகிறது.

1 2 வது எதிரி தனக்காக ரூ.10,000/-க்கு பிணைப் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும். அதே தொகைக்கு மனுதாரர் / 2 வது எதிரியின் உறவினர்கள் அல்லது நண்பர்கள் இருநபர்கள் பிணை பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும். பிணையதாரர்கள் பிணை பத்திரத்தில் அவர்களது சமீபத்திய புகைப்படத்தினை ஒட்ட வேண்டும். மேலும் பிணையதாரர்களின் ஆதார் கார்டு அல்லது அவர்களது அடையாளத்தை காட்டக் கூடிய வேறு அடையாள அட்டைகளின் புகைப்பட நகலினை தாக்கல் செய்ய வேண்டும்.

2 மேலும் 2 வது எதிரி நீதிமன்றக் காவலில் இருந்து வெளியில் வந்த மறுநாள் முதல் தினமும் காலை 10.00 மணிக்கும் மாலை 5.00 மணிக்கு பழனி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தொடர்ந்து மறு உத்தரவு வரும்வரை கையெழுத்திட வேண்டும்,

3 2 வது எதிரி தவறாமல் வழக்கு விசாரணைக்கு ஆஜராகவேண்டும்.

4 மேற்படி நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் மாண்பைமிகு உச்ச நீதிமன்றம் P.K.Shaji //Versus// State of Kerala 2005 AIR S.C.W 5560 என்ற முன்தீர்ப்பின்படி இந்நீதிமன்றமோ, அல்லது விசாரணை நீதிமன்றமோ, மனுதாரர் மீது சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும்.

5 மனுதாரர் / 2 வது எதிரி ஜாமீனில் இருந்து வெளியில் வந்து, வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகினால், மேற்படியார் மீது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 269 BNS ன் கீழ் புதிய முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய நேரிடும்.

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் நாள் வியாழக்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.03.12 17:55:27 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.